# கிழக்கில் ஆயுதமற்ற நிலையில் தமிழ் பொலிஸார்!

நூலகம்
4-5-1991

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 | சித்திரை 21 | ஏப்ரல் 18 | இதழ்: 83

யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 4-5-1991

(மட்டக்களப்பு)
மட்டுநகர்ப் பகுதியில் கடமையில் ஈடுபட்டுள்ள பொலிஸார் ஆயுதங்கள் எதுவுமற்ற நிலையிலேயே காவல் புரிகின்றனர்.
இதேவேளை நகர்ப்பகுதியில் காணப்படும் சிங்கள, முஸ்லிம் பொலிஸார் நவீனரக
(4-ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் படையினரால் இருதமிழர் வெட்டிக் கொலை

(திருகோணமலை)
திருகோணமலையிலுள்ள பாலத்தோப்பூர் இராணுவத்தினர் பட்டுத்திடல் என்னுமிடத்தில் ஒரு ஆணையும் ஒரு பெண்ணையும் மிகக்கொடூரமான முறையில் வெட்டிக் கொலைசெய்துள்ளனர். இவர்கள் இருவரும் தமிழர்கள்.
இச்சம்பவம் கடந்த முதலாம் திகதி இடம்பெற்றது.
இதேவேளை 64ம் கட்டையிலிருந்து சிறிலங்கா இராணு
(4-ம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் வ த்தகர்களுக்கு படையினர் பாதுகாப்பு

(மட்டக்களப்பு)
மட்டு நகரிலுள்ள வர்த்தக நிலையங்களை வைத்திருக்கும் முஸ்லிம் வர்த்தகர்களுக்கு படையினர் பாதுகாப்பளித்து வருகிறார்கள்.
காத்தான்குடியிலிருந்து சுமார் 5 மைல் தூரம் மட்டு நகருக்கு இந்த வியாபாரிகள்
(4-ம் பக்கம் பார்க்க)

# வவுனியா மாவட்டத்திலுள்ள
# குடியிருப்பு பகுதிகளை நோக்கி
# அவ்ரோ, பொம்மர் தாக்குதல்

## சிறுமி பலி; வீடுகள், கடைகள் சேதம்

(வவுனியா)
வவுனியா மாவட்டத்தில் ஸ்ரீலங்கா படையினர் நேற்றும், நேற்றுமுன்தினமும் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கடும் விமானத் தாக்குதல்களை மேற்கொண்டனர். இத்தாக்குதல் சம்பவத்தில் சிறுமியொருவரும் மற்றுமொருவரும் கொல்லப்பட்டனர். வீடுகள், கடைகள் சேதத்திற்குள்ளாகின.
ஸ்ரீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான ஒரு அவ்ரோ மற்றும் குண்டுவீச்சு விமானங்கள், ஹெலிகள் ஆகியன இக்கடும் தாக்குதலில் ஈடுபட்டன.
வவுனியா மாவட்டம் தாண்டிக்குளம்பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் குடியிருப்புப் பகுதிகளைநோக்கி நேற்றுக்காலை 5 மணியளவில் 6 எறிகணை தாக்குதல்களை மேற்கொண்டனர்.
பின் 7 மணியளவில் 2 ஹெலிகள், 2 குண்டுவீச்சு
(4-ம் பக்கம் பார்க்க)

## மணலாற்றிலும் விமானக் குண்டுவீச்சு

(மணலாறு)
மணலாறு மாவட்டத்தில் கடந்த இரு நாட்களாக விமானப்படையினர் பொதுமக்கள் வாழும் பகுதிகளில் கடும் தாக்குதல்களை மேற்கொண்டதனால் வீடுகள், கடைகள் உட்பட பல கட்டிடங்கள் பல சேதத்துக்கிலக்காயுள்ளன.
விமானப்படையினர் மேற்படி மாவட்டத்திலுள்ள குமுழ
(4-ம் பக்கம் பார்க்க)

## வேப்பங்குளம் பகுதியில் மேலும் ஆயுதங்கள் மீட்பு!

(மன்னார்)
மன்னார் வேப்பங்குளம் பகுதியில் கடந்த மாதம் 30-ம் திகதி விடுதலைப் புலிகள் இராணுவத்தினர் மீது மேற்கொண்ட அதிரடித்தாக்குதல் நடைபெற்ற இடத்தைநேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் சென்றுபார்த்தபோது மேலும் சில ஆயுதங்களை கண்டெடுத்தனர். அவற்றின் விபரம் வருமாறு: ஆர். பி. ஜி. - 1, எப். என். ஸி. - 1 அதற்குரிய மகஸின் 3, செட் - 1, 5.56 ரவை 240.
(4-ம் பக்கம் பார்க்க)

## 15 ஆயிரம் டொலர் கடத்தியவர் பிடிபட்டார்

[கொழும்பு]
இலங்கைக்கு வரும் போது 5000 அமெரிக்க டொலர் கொண்டுவந்த ஒருவர் நாட்டைவிட்டு வெளியேறும் போது 15,000 அமெரிக்க டொலரை எடுத்துச்செல்லும் போது பிடிபட்டார்.
குவைத் நாட்டுப் பிரஜை ஒருவரே இச்செயலில் ஈடுபட்டு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளினால் கண்டுபிடிக்கப்பட்டார்.
இவரது 15,000 டொலரும் பறிமுதல் செய்யப்பட்டன.
(பூ)

## இளைப்பாறிய சுகாதார பரிசோதகர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம்

(யாழ்ப்பாணம்)
யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நிருவாக எல்லைக்குள் உள்ள பொதுசுகாதாரப் பரிசோதகர்கள் பற்றாக்குறையைத் தீர்க்கும் முகமாகப் பத்து இளைப்பாறிய பொதுசுகாதாரப் பரிசோதகர்கள் ஒருவருட ஒப்பந்த அடிப்படையில் இம்மாதம் 15-ம் திகதி முதல் நியமிக்கப்படவுள்ளனர்.
யாழ். மாவட்டத்திலுள்ள நெல்லியடி, ஆனைக்கோட்டை, வல்வெட்டித்துறை, கொடிகாமம், அச்சுவேலி, கீரிமலை, நல்லூர், சுழிபுரம், அளவெட்டி ஆகிய இடங்களிலுள்ள பொது சுகாதாரப் பரிசோதகர்கள் வெற்றிடங்கள் இவர்கள் மூலம் நிரப்பப்படும்.
[!53]

## சந்திரசேகர் தமிழ்நாடு விஜயம்

(சென்னை)
பிரதமர் திரு. சந்திரசேகர் எதிர்வரும் 14ம் திகதி தமிழ்நாடு வரவுள்ளார்.
துணைப்பிரதமர் திரு. தேவிலாலும் மே 19ம் திகதி தமிழ்நாடு வந்து தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொள்வார்கள்.
(பூ)

## படையினர் மத்தியில் சலிப்பு வீண் உயிரிழப்பென கருத்து

(கொழும்பு)
வடக்கு-கிழக்கில்யுத்தத்தில் ஈடுபட்டுவரும் படையினரிடையே ஓர் சலிப்புத்தன்மை தோன்றியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.
நேரடியாகவே அதிகாரிகள் உட்பட பல படையினர் இவ்வித சலிப்பை வெளிப்படையாகத் தெரிவித்துள்ளனர்
இந்த யுத்தத்தால் பிரயோசனம் எதுவும் இல்லை என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.
வடக்கு-கிழக்கில் தாம் வீணாக உயிரிழப்பதாகவும்
(4-ம் பக்கம் பார்க்க)

## வலந்தலை சந்தியிலிருந்து ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
காரைநகர் வலந்தலை சந்தியில் இருந்து படையினர் பொன்னாலை, மூளாயைநோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டுவருகின்றனர்.
நேற்று முன்தினம் மாலை வலந்தலை சந்தியிலிருந்து மூன்றுக்கும் மேற்பட்ட ஷெல்கள் பொன்னாலை சந்திக்கருகிலும், ட்ரான்ஸ்போமருக்கு அருகிலும், ஆஸ்பத்திரிக்கு பின்னாலும் வீழ்ந்துவெடித்தன.
இதேவேளை வலந்தலை சந்தியிலிருந்து கலிபர் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காரைநகரின் உட்பகுதியினுள் ஆங்காங்கே குண்டு
(4ம் பக்கம் பார்க்க)

## தென்பகுதியில் அவசரகால சட்ட விதிகள் மேலும் தளர்த்தப்பட்டன

(கொழும்பு)
வடக்கு கிழக்கு பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இன்று நள்ளிரவு முதல்அவசர காலசட்டத்தின் சில விதிகள் தளர்த்தப்பட்டிருப்பதாக ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா நேற்று அறிவித்தார்
எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலை முன்னிட்டே இந்த
(4-ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கடற்பகுதியில் ஆட்லறி ஷெல் தாக்குதல்

(வடமராட்சி)
வடமராட்சிக் கடற்பகுதியில் கடற்படையினர் கடற்தொழிலாளர்களின் படகுகள் மீதும் குடியிருப்புப் பகுதிகளை நோக்கியும் துப்பாக்கிப் பிரயோகமும், ஆட்லறிஷெல்
(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## தேவை

வேப்பம் பூ, தேவை. மில்க் வைற், யாழ்ப்பாணம்.
(ஏ 1271)

## பரிசுதரும் "அக்கினி"

மீரா வெளியீடு இனவிடுதலையை மையமாக செழியன் எழுதியது. துர்க்கா ஸ்ரேசனேஸ் சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி, யாழ்ப்பாணத்தில் சகல புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றது.
(சி 4693)

## புலமைப்பரிசில் பரீட்சை

(ஆண்டு 5)

28-04-91ம் திகதி பரீட்சை (முதலாவது) 05-05-91 ஞாயிறு மு. ப. 8-00, மு. ப. 10-30 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலும் பி. ப. 4-00 மணிக்கு மக்கள் வைத்தியசாலை முன் பாசகுளப்பிட்டி - ஆனைக்கோட்டை வீதியிலும் நடைபெறும். ஆண்டு 4 பரீட்சை 12-05-91 ஞாயிறு மு.ப. 8-00, பி.ப 1-00 நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும்.
(சி-4702)

## தாதிகள் உடன் தேவை

யாழ். நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள தனியார் வைத்திய நிலையத்திற்குப் பயில விரும்புகின்ற தாதிகள் உடன் தேவை. தகைமைகள் G C E (O/L) சித்தியடைந்திருப்பதுடன், ஆங்கிலத்தில் எழுத, வாசிக்கத் தெரிந்திருத்தல்வேண்டும். விண்ணப்பதாரிகள் தகைமைச் சான்றிதழ்களுடன் 5-5-91 ஞாயிறு காலை 9-00 மணிக்கு இல: 95 யாழ் வீதி, மானிப்பாய் (சந்தைக்கும், கிறீன் ஆஸ்பத்திரிக்கும் இடையில்) முகவரிக்கு சமூகம் தரவும்.
(சி 4704)

## தரன் படப் பிடிப்பாளர்

கலர்-கறுப்பு வெள்ளைப் படங்கள், றபர் சீல், பிளாஸ்ரிக் வேலை, விளம்பர போட், புளொக் டிசைன் மற்றும் ஓவிய வேலைகள், தரன் படப் பிடிப்பாளர், 87, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(சி 4673)

## மரத்திலிருந்து வீழ்ந்து காயம்

(யாழ்ப்பாணம்)

நாரந்தனை வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து நீர்வேலியில் வசித்து வந்த மாணவன் ஒருவர் வளவிற்குள் நின்ற மாமரம் ஒன்றின் மேல் ஏறி மாங்காய்கள் பறித்துக்கொண்டிருந்தபோது தவறுதலாக வீழ்ந்ததில் வலதுகை முறிந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறையிலிருந்து இடம்பெயர்ந்து நாரந்தனை வடக்கில் வசித்துவந்த பீட்டர் ஜொலின் என்ற 14 வயது மாணவரே காயப்பட்டவராவார்.
(56)

# கடிதம் சமர்ப்பித்தால் பிரதி ஓய்வூதிய வவுச்சர்

(யாழ்ப்பாணம்)

தீவுப் பகுதியில் உள்ள பல ஓய்வூதியர்களின் பெப்ரவரி மாதத்திற்கான பென்சன் வவுச்சர்கள் அண்மையில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையினால் தொலைந்து அல்லது காணாமற்போய்விட்டதாகத் தெரியவருகிறது.

இதுபற்றி யாழ். செயலகத்துடன் தொடர்புகொண்டபோது, அப்படியானவர்களுக்குப் பிரதி பென்சன் வவுச்சர்கள் வழங்கப்படுமென்றும், அதற்கு அவர்கள் ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கும் ஸ்தாபனங்களிடமிருந்து பெப்ரவரி மாத ஓய்வூதியம் தாம் பெறவில்லையென்று அத்தாட்சிப்படுத்தும் கடிதங்களைச் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.
[152]

# யாழ். ஆஸ்பத்திரியில் திருட்டு முயற்சி காவலாளியால் முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ் போதனா வைத்தியசாலை குசினிப் பகுதியில் அமைந்துள்ள மருந்தகத்தினை உடைத்து திருடும் முயற்சியில் ஈடுபட்டபோது கையும்மெய்யுமாக காவலாளியினால் இரு சுத்திகரிப்பு தொழிலாளர்கள் பிடிக்கப்பட்டனர்.

இதையடுத்து சகல சுத்திகரிப்புத் தொழிலாளர்களும் கடமையில்லாத சமயங்களில் ஓய்வு அறைகளிலோ விடுதிகளிலோ நடமாடுவது பணிப்பாளரினால் தடைசெய்யப்பட்டுள்ளது.

விடுதியில் சொந்த உறவினர்களுடன் மட்டுமே தங்க அனுமதிக்கப்படுவர் என்றும், வேறு நோயாளருக்கு உதவியாக நிற்பதும் தடைசெய்யப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
(56)

# யாழ். - வவுனியா வீதியில் விபத்து ஏற்படும் சாத்தியம்

(பூநகரி)

வவுனியாவிலிருந்து யாழ். மாவட்டம் வந்துகொண்டிருக்கும் லொறிகள், ஆட்டோக்கள், மோட்டார் சைக்கிள், டிரக்டர்கள், சைக்கிள்கள் என்பன கூடும் லாபத்தை எதிர்பார்த்து அளவுக்கதிகமான பொருட்களையும், பயணிகளையும் ஏற்றிக்கொண்டு வருவதனால் போக்குவரத்துப் பாதைகள் சீரற்று இருப்பதால் வீதி விபத்துக்கள், கால், கை முறிவுகள் பயணிகளுக்கும் வாகனக்காரர்களுக்கும் ஏற்பட்டு உயிராபத்துக்களும் ஏற்பட இடமுண்டாகிறது.

அதிக பாரத்துடன் வாகனம் போக்குவரத்துச்செய்யும்போது வீதியைத்தடைசெய்து வருவதாலும் பாதையினை விட்டுக்கொடுக்காத நிலையிலும் இச்சம்பவங்கள் நிகழ்ந்து

[4-ம் பக்கம் பார்க்க]

## மண்ணெண்ணை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றும் கைதடி மாணவர்களுக்கு தெ. மே. ப. நோ. கூ. சங்கத்தால் கட்டுப்பாட்டு விலையில் மண்ணெண்ணை விநியோகம் செய்யப்பட்டது,

தெ. மே. ப நோ கூ. சங்க தலைவர் ப. செல்லத்துரையின் ஏற்பாட்டில் இந்த விநியோகம் நடைபெற்றது.

## அமெரிக்க டிப்ளோமா

(யாழ்ப்பாணம்)

தற்போது தமிழகத்தில் உள்ள கவிஞரும், நூலாசிரியரும், திரைப்பட நடிகருமான விஜயேந்திரனுக்கு தமிழிலக்கியத்தில் அமெரிக்கப்பல்கலைக்கழகத்திடமிருந்து டிப்ளோமா கிடைத்துள்ளது.

இவருக்கு ஏற்கனவே முதுகலைமாணிப்பட்டம் கிடைத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# தீவுப்பகுதி அகதிகள் பாடசாலைகளுக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

தீவுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த அகதிகளாக யாழ். நகரில் தங்கியிருப்போரில் சுமார் 800 குடும்பங்கள், யாழ் அடைக்கல நாயகி தேவாலயத்தில் தங்கியுள்ளன.

இந்த அகதிகளுக்குத் தேவையான உணவுப்பொருட்களை அரச சார்பு நிறுவனங்களும், ரி. ஆர். ஆர். ஓ, கியூடெக், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்ற பொது நிறுவனங்களும் வழங்கிவருகின்றன.

இவ்வகதிகளில் குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு நெஸ்பிறே பால்மாவை யாழ். பல்கலைக்கழகத்தினர் வழங்கியுள்ளனர்.

இந்த அகதி முகாமிலிருந்து மேலதிக அகதிகள், கொழும்புத்துறை, நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம் மற்றும் கைதடிப் பகுதியில் உள்ள பொதுக் கட்டடங்களுக்கு மாற்றப்பட்டுவருகின்றனர்.
(க-101)

## உற்சவம்

(கொழும்புத்துறை)

சுன்னாகம் கதிரமலை அருள்மிகு சிவன் ஆலய வருடாந்த உற்சவம் இன்று 4ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 11-00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.
(154)

# தடுப்பூசி போட பெருமளவு மக்கள் வருகை

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து அகதிகளாய் வசிக்கின்ற குடும்பங்களிலுள்ள குழந்தைகள், சிறுவர்கள், குழந்தைகட்கான தடுப்பூசி மருந்தினை ஏற்றும் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் குழந்தைகள் சிகிச்சை நிலையத்திற்கு தினமும் வந்து குவிந்தபடி உள்ளனர்.

வழமையைக் காட்டிலும் தற்போது அதிக எண்ணிக்கையில் போலியோ தடுப்பூசி மருந்தினை ஏற்றிக்கொள்ளும் முகமாக குழந்தைகள், சிறுவர்கள் வருவதனால் 'போலியோ றெப்ஸ்' முடிவடைந்துவிட்டன

கப்பலில் இறக்கப்பட்டவுடன் ஒருசில தினங்களில் மீண்டும் ஊசி போடப்படும் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.
(56)

## கிளிநொச்சி வர்த்தகசங்கம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வர்த்தகர் சங்கத் தலைவராக வர்த்தகர் இ. சரவணபவானந்தன் தெரிவு செய்யப்பட்டார்.

உபதலைவர்களாக தி. இராமச்சந்திரன், ஆ. பரமலிங்கம் ஆகியோரும், செயலாளராக திரு. நவரெத்தினராசாவும், பொருளாளராக திரு. குணராசாவும் தெரிவானார்கள்.
[83]

# இராசி பலன்

**04-05-1991**

**சனிக்கிழமை**

பஞ்சமி மு. ப. 11-01வரை, பூராடம் பி. இ. 1-05 வரை, சித்தயோகம், இராகுகாலம் காலை 8 50 முதல் 10-26 வரை, சுபநேரம் பகல் 2-56 முதல் 4-26 வரை.

மேஷம்- தொழில் பாதிப்பு, வரவுக்கு மீறிய செலவு, உட்பகை.

இடபம்- வயிற்றில் ரோகம், குடும்ப பகை, அதிக யோசனை

மிதுனம்- வீட்டில் சுபகாரியம், தெய்வீக செலவு, தொழில் சிறப்பு

கடகம்- உபசரணை, நண்பர்கள் உதவி, காரிய பலிதம்.

சிங்கம்- பெரியோர் பகை, வீட்டில் துன்பம், பணச் செலவு.

கன்னி- தொழில் கஷ்டம், வாக்குவாதம், குடும்பபிரிவு.

துலாம்- குடும்ப மகிழ்ச்சி, இனசன வருகை, அதிகாரிகள் உதவி

விருச்சிகம்- அந்நியவாசம், அவமரியாதை, பதட்டம்.

தனுசு- குடும்ப செலவு, வேலைப்பளு, விவேகமின்மை.

மகரம்- சிநேகிதர் பகை, தொழில் அலைச்சல், உடல் சோர்வு

கும்பம்- பண வரவு, புதிய உறவு, தூரத்து பயணம்.

மீனம்- தொழில் லாபம், புத்திரர் கவலை, பதட்டமான சூழ்நிலை.

: ஜோஸ்யர்


# தமிழீழ காவல்துறை பதவிவெற்றிடம்

**கணக்கு லிகிதர்**

வயது எல்லை: 25 — 45

தகைமை: கணக்கு துறையில் குறைந்தது 5வருட அனுபவம் இருத்தல் வேண்டும்,

**நிர்வாக உத்தியோகத்தர்**

தகைமை: நிர்வாகத்துறையில் அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

பொறுப்பாளர்
தமிழீழக் காவல்துறை

(எ1268)



# தமிழீழ காவல்துறை பதவிவெற்றிடங்களுக்கான விண்ணப்பம்

காவலர்களுக்கான தகைமைகள்:

[1] வயது எல்லை: 18 வயதுமுதல் 30 வயதுவரை
[2] உயரம்: 5 அடி 6 அங்குலம்
[3] கல்வித்தகைமை: எட்டாம் வகுப்புமுதல் க. பொ. த. [சாதாரணம்] க. பொ. த. [உயர்தரம்] வரை.

விண்ணப்பதாரிகள் இம்மாதம் 07-05-91 ற்கு முன் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். பிரதேசக் காரியாலயத்தில் சான்றிதழ் பிரதிகளுடன் சமுகமளிக்கவும்.

பொறுப்பாளர்
தமிழீழக் காவல்துறை

[எ1267]



# தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கலந்துரையாடல்

காலம்: 05-05-1991 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணி.

இடம்: சங்கத் தலைமைக் காரியாலயம்.

தலைவர்: திரு. சி. சிவமகாராசா அவர்கள் (சங்கத் தலைவர்)

## கலந்துரையாடல் விடயம்

"தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தைப் பாதிக்கும் அண்மைக்காலச் சம்பவங்கள் பற்றி ஆராய்தல்."

சங்கக் கிளைக்குழு, மகளிர் குழு உறுப்பினர்கள் அனைவரும் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சி. முருகையா,
செயலாளர்,
தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கம்.

தெல்லிப்பளை.
03-05-1991.

(ஏ-1273)

# ★ கடந்த நான்கு மாதத்தில் 300 பேரைக் காணவில்லை

# சுதந்திரகட்சிஎம்.பி. அறிவிப்பு

(கொழும்பு)

தென்பகுதியில் இவ்வருடத்தில் இதுவரை காணமல் போன 300 பேர் பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளதாக சுதந்திரக்கட்சி எம். பி.யும் 'மனித உரிமைகள் அமைப்பு' செயலாளருமான திரு. மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பெருமளவினர் ஜே. வி. பி. சந்தேகநபர்களென சிறையில் அடைக்கப்பட்டு பின் விடுதலை செய்யப்பட்டவர்கள் என்றும் தெரியவருகிறது.

அண்மையில் இலங்கை வரவிருந்த ஐ நா. மனிதஉரிமைகள் குழுவை அடுத்த சில மாதங்களின் பின் வருமாறு அரசு கோரியுள்ளது. இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு அடுத்தமாதம் நடைபெற இருப்பதால் இங்கு நடைபெறும் அட்டூழியங்களை மறைக்கவே இவர்களின் வருகை பின்போடப்பட்டுள்ளதாகவும் திரு. மகிந்த ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார். (சி)

# புயல் அகோர மீட்புப்பணி உலக நாடுகள் பல உதவி

(டாக்கா)

பங்களாதேஷில்எழுந்துள்ள அவசரகால நிலையையடுத்து உலக நாடுகள் பல பலகோடி டாலர்களை உடனடியாகஉதவியுள்ளன.

மேலும் பல நாடுகள் உதவிகளை மேற்கொண்டு வருகின்றன. பங்களாதேஷ் நோக்கி பல பகுதியிலுமிருந்து உதவிகள் விரைந்தவண்ணமுள்ளன.

அமெரிக்கா, பிரான்ஸ், கனடா, யப்பான், இந்தியா, இலங்கை உட்பட பலநாடுகள் பல உதவிகளை வழங்கியுள்ளன, மருந்து வகைகள், உணவுப் பொருட்கள், உடைகள் உட்பட பலவகை உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை இதுவரை 30,000க்கும் மேற்பட்ட சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மீட்புப்பணிகள் தொடர்ந்த வண்ணமுள்ளன. (சி)

## விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு சென்று யாழ். திரும்பிய பயணி ஒருவர் செலுத்திவந்த மோட்டார் சைக்கிளுடன் ஓட்டோ றிக்ஷோ எதிர்பாராமல்வந்து மோதியதில் காலில் படுகாயங்களுக்குள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குரும்பசிட்டியிலிருந்து இடம்பெயர்ந்து சாவகச்சேரியில் வசிக்கும் அருளம்பலம் யோகலிங்கம் (45 வயது) என்பவரே மாங்குளம் கண்டி வீதியில் இடம்பெற்ற இவ்விபத்தில் காயப்பட்டவராவர். (56)

# இந்திய ஹெலிகள் டாக்கா விரைவு

(டாக்கா)

பங்களாதேஷில் கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட அகோர புயலால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்க இந்தியா ஒரு தொகுதி 'ஹெலிகொப்டர்களை' பங்களாதேசுக்கு அனுப்பியுள்ளது.

பல நகரங்கள் வெள்ளப்பெருக்கில் மூழ்கிவிட்டதால் பெருமளவு மக்கள் இதனுள் மூழ்கியிருக்கலாமெனவும் அஞ்சப்படுகிறது.

நேற்றுக் காலை இந்திய விமானப் படை ஹெலிகள் பங்களாதேஷ் சென்றடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## தற்காலிக மலசலகூடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆரோக்கிய மாதா தேவாலயத்தில் தங்கியுள்ள அகதிகளின் நலனை முன்னிட்டு, செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் தற்காலிக மலசலகூடங்களை அமைத்துக் கொடுத்துள்ளனர். (152)

# 2ம் தவணைக்காக 20ம்திகதி பாடசாலைகள் ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகள் யாவும் இம்மாதம் 20ம் திகதி இரண்டாம் தவணைக்காகத் திறக்கப்படும் என்று வட பிராந்திய கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற க. பொ. த. (உயர்தர)பரீட்சை மே மாதம் 18ம் திகதி வரை நடைபெற இருப்பதாலும் இப்பரீட்சை நடாத்துவதற்கு பரீட்சை உத்தியோகத்தர்களாக பெரும்பாலும் அதிபர்களும் ஆசிரியர்களும் ஈடுபட்டிருப்பதாலும் இடம்பெயர்ந்தோர் நகர்ப்புறத்திலுள்ள பெரும்பாலான பாடசாலைகளில் தங்கியிருப்பதாலும், அத்தோடு காரைநகர் மற்றும் தீவுப்பகுதிகளிலும் நிலைமை சுமூக நிலை அடையாதமையினாலும் மே மாதம் 20ம் திகதி பாடசாலைகளை ஆரம்பிப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மே மாதம் 6ம் திகதி தொடக்கம் 20ம் திகதி வரை நடாத்தப்படாத 10 பாடசாலை நாட்களையும்இத்தவணையில் வருகின்ற சனிக்கிழமைகளில் நடாத்தி பாடசாலை நாட்களை ஈடுசெய்ய வேண்டுமென அதிபர்கள் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார்கள்.

இது பற்றிய சுற்றறிக்கை சகல கோட்டக்கல்வி அலுவலங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. (152)

## அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் முறைசாராக் கல்விப் பிரிவின் பத்திரிகையாளர் பயிலுநர்களுக்கான கூட்டம், 05-5-91 ஞாயிறு முற்பகல் 11-00 மணிக்கு யாழ்/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும். இக்கூட்டத்திற்குச் சகல பயிலுநர்களையும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

# அகதிமுகாம்களைச் சுற்றி பலத்த பொலிஸ் காவல்

[சென்னை]

இந்தியத் தேர்தலையொட்டி தமிழ்நாட்டில் இலங்கை அகதிகள் தங்கியுள்ள முகாம்களைச்சுற்றிப் பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் ஆரம்பமாவதற்கு முதல் நாளிலிருந்து இந்த முகாம்களைச் சுற்றிப் பலத்த பொலிஸ் காவல் போடப்படும் என்று அகதிகள் நல அதிகாரியொருவர் கூறினார்.

இதேவேளை இந்த முகாம்களிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இம்மாதம் முதல் வெளியே செல்வதற்குத் தடை விதிக்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அகதிகள், வரவிருக்கும் பொதுத்தேர்தல்களில் எவ்வித ஈடுபாடும் காட்ட வேண்டாமென அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என அகதிகள் நல ஒருங்கிணைப்பாளர் திரு. ராம்தாஸ் தெரிவித்தார். (பூ)

# தீவுப்பகுதி மக்களுக்கு உலர் உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கான உலர் உணவு விநியோகம் யாழ். நகரில் தற்காலிகமாக இயங்கும் புங்குடுதீவு, ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கக்கிளைகள் மூலம் வழங்கப்பட்டுவருகின்றன.

அரிசி, மா, சீனி மற்றும் பாலுணவுப் பொருட்கள் குடும்ப அட்டைகள் வைத்திருப்போருக்கு வழங்கப் பட்டுவருகின்றன.

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கத்தினர் யாழ். நகரிலுள்ள சிறும்பியடி ஒழுங்கையில் உள்ள கட்டிடத்தில் ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க கிளையிலும், மானிப்பாய் வீதியில் இயங்கும் வேலணை ப. நோ. கூ. சங்க கிளையிலும் நேற்று நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன. (க-152

## தமிழ்நாடு தேர்தல் களம்

### ★ ஈழப்போராளிகள் காரணமல்ல

''பல மாநிலங்களிலும், இருப்பதைப்போல சட்டம் ஒழுங்கு தமிழ் நாட்டிலும் சீர்குலைந்து இருக்கிறது. ஆனால் அதற்கு ஈழப்போராளிகள் காரணமல்ல கொலை, கொள்ளை கற்பழிப்பு போதைப்பொருள்கள் சாராய உற்பத்தி சந்தன மர கடத்தல் என்று எல்லாமே தமிழகத்தில் அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டது'' என்று பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் டாகடர் ராம்தாஸ் பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது: தமிழ் நாட்டில் நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது பொலிஸ்காரர்கள் வீட்டுக்கு அனுப்பப்படவேண்டியவர்கள். இந்த அளவிற்கு தமிழ் நாட்டின் நிலைமையை மோசமாக ஆக்கியதற்கு கருணாநிதி தான் காரணம். கலைஞர் கருணாநிதிக்கு பதிலாக அவரது மகனை முதல்வராக்கினால் கூடபரவாயில்லை.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எந்த அரசையும் ஜனநாயகத்திற்கு விரோதமாக கலைக்கப்படுவதை நாங்கள் எதிர்க்கின்றோம்.

தி. மு. க, காங்கிரஸ், அ. தி. மு. கவை தவிர பாட்டாளி மக்கள் கட்சி பலம் வாய்ந்த மூன்றாவது அணியாக உருவெடுத்துள்ளது.

### ★ எங்கிருந்தோ வந்தான்

ஹைதரபாத்திலிருந்து செல்வி ஜெயலலிதா சென்னைக்கு திரும்பியதினம். சென்னை டி. வியில் ஒளியும், ஒலியும் நிகழ்ச்சியில் கடைசியாக எங்கிருந்தோ வந்தான் திரைப்படத்திலிருந்து சிவாஜி, ஜெயலலிதா நடித்த பாடல் காட்சி ஒளிபரப்பட்டது. இதில் விசேஷமென்னவென்றால் செல்வி ஜெயலலிதா சென்னைக்கு வந்துள்ளதாக அன்று காலைப்பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. மாலையில் 'எங்கிருந்தோ வந்தாள், திரைப்பட பாடல் காட்சி ரி வி.யில் ஒளிபரப்பட்டது.

### ★ மீண்டும் நண்பர்கள்

கலைஞர் கருணாநிதியும், இரா. செழியனும், வி. பி. சிங்கினால் மீண்டும் நண்பர்களாகிவிட்டனர்.

### ★ எம்.ஜி. ஆரின் எதிரி ஜெயலலிதா

தலைவர் எம். ஜி. ஆர். ஜானகி அம்மாள் இருவருக்குமே தான் நன்றிக்கடன பட்டவள் என்று கடந்த தேர்தலில் அ. தி. மு. க (ஜானகி அணி) சார்பில் போட்டியிட்ட நடிகை வெண்ணிற ஆடை நிர்மலா பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: செல்வி ஜெயலலிதா, தான் விசுவாசம் காட்டுகிற தலைவருக்கு முதல் எதிரி. தலைவர் எம். ஜி. ஆர். உயிருடன் இருக்கும் போதே அவருக்கு எதிரான ஊழல் புகார் எழுதி பிரதமருக்கு அனுப்பி வைத்தார், ஆதலால் அவரை எம். ஜி. ஆரின் உண்மை தொண்டர்கள் ஆதரிக்க கூடாது என்றார்.

### ★ வேட்பாளர் பெயர்

பெரம்பூர் அ. தி. மு. க. வினர் தேர்தல் தேதி அறிவிப்புக்கு முன்னரே பல தேர்தல் பிரசார ஓவியங்களை வரைந்துவிட்டனர். நடுவில் இடைவழி விட்டிருந்தனர். வேட்பாளர் பெயர் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டபின்னர் அந்த இடத்தில் வேட்பாளர் பெயர் எழுதப்பட்டது.

### ★ பொலிஸார் தி. மு. க. தான்

பொலிஸார் இன்னமும் தி. மு. க. வின் கைக்கூலிகளாகவே இருக்கின்றனர் என்று திருவல்லிக்கேணியில் நடந்த அ. தி. மு. க. கூட்டத்தில் தி. பாலன் கூறினார். அவர் மேலும் கூறியதாவது: அரைக்காட்சட்டை போட்டு அலைந்து திரிந்த பொலிஸாருக்கு முழுக்காட் சட்டை அணிந்து அழகு பார்த்தவர் தலைவர் எம். ஜி. ஆர். தான், நியாயவிலை என்று குறைந்த விலையில் பொலிஸாருக்கு உணவுபொருட்களை வழங்கியவர் எம். ஜி. ஆர்

### ★ நல்வாழ்வுத் திட்டம்

கலைஞர் ஆட்சிக்கு வந்தபோது திறைசேரி காலியாக இருந்தது இருவருடத்திற்குள்ளாக 400 கோடி அரச ஊழியர்களுக்கும் ஏழை எளியவர்களின் நல்வாழ்வுதிட்டத்திற்கும் பணம் ஒதுக்கீடுசெய்தார் என்று வேலூர் கோட்டை மைதானத்தில் நடந்த தி மு க கூட்டத்தில் பேசியமுன்னாள் அமைச்சர் திரு. துரைமுருகன் கூறினார். அவர் மேலும் கூறியதாவது; சட்டம் ஒழுங்கு தமிழ் நாட்டில் இல்லை என்கிறார்கள். இங்கு கொலை கொள்ளை கற்பழிப்புக்குப் பயந்துமாலை 6 மணியுடன் கடைகளை மூடுகிறார்களா? இரவு 8 மணிக்குப்பின் வீதியில் ஜனநாட்டம் இல்லையா? இரண்டாவது சினிமா காட்சிகள் இல்லையா?

# ஒருலட்சம் மக்களுடன் பவனி வந்த ஊர்திகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் வரலாறு காணாத சனசமுத்திரத்துடன் மேதினப்பேரணியும் பொதுக் கூட்டமும் இடம்பெற்றது.

இரணைமடுச் சந்தியிலிருந்து ஆரம்பமான பேரணியில் போராளிகள், மாதர் அணியினர், மாணவர் அணியினர், விவசாயிகள், வர்த்தகர்சங்கத்தினர், தொழிலாளர்கள், கூட்டுறவாளர்கள், சிற்றூரவைகள் உட்பட சுமார் ஒரு லட்சம் பேர் வரை அணிதிரண்டு வந்தனர். பல அலங்கார ஊர்திகளும் பவனி வந்தன.

பின்னர் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய விளையாட்டுத் திடலில் பொதுக் கூட்டம் வன்னிப்பிராந்திய அரசியல் பொறுப்பாளர் திரு. மனோ தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட அரசியல்பொறுப்பாளர் திரு. இ. கோபி உட்பட பல்வேறு தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் உரையாற்றினார்கள். (83)

## யாழ். - வவுனியா

(2ம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றது. எனவே இப்படியான வீதி விபத்துக்களையிட்டு மக்கள் கவலையடைந்து வருகின்றனர். (23)

# அகதி முகாம்களுக்கு யாழ். மாநகர சபையினால் சுகாதார வைத்திய வசதிகள்

[யாழ்ப்பாணம்)
தீவுப்பகுதிகளிலிருந்து யாழ். நகருக்கு வந்து அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு யாழ். மாநகர சபை சுகாதாரப்பிரிவினால் வைத்திய வசதிகள் செய்யப்பட்டு வருவதுடன் குடிதண்ணீர் விநியோகமும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு தற்காலிக மலசல கூடங்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. [வி]

## ஊழியர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)
தீவகத்திலுள்ள மாவட்ட ஆஸ்பத்திரிகள், கிராமிய ஆஸ்பத்திரிகள், மத்திய மருந்தகங்கள், சுகாதாரவைத்திய அதிகாரி பணிமனை ஆகியவற்றில் கடமையாற்றிய சகல ஊழியர்களும் நிலைமை சீரடையும் வரையும் தற்காலிகமாக யாழ். நகரப்புறங்களிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கடமையாற்றும்படி யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் பணிக்கப்பட்டுள்ளார்கள். (153)

## படையினர்

1-ம் பக்கத் தொடர்ச்சி)
படையினர் கூறியுள்ளனர். யுத்தம் ஆரம்பித்தபோது இவர்களுக்கு இருந்த செல்வாக்கு இப்போது இல்லையென்றும் கூறப்படுகிறது. (சி)

## வடமராட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.
நேற்றுமுன் தினத்திலிருந்து நேற்று அதிகாலைவரை இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. (51)

## பாரதிதாசன் கவிதைகளுக்கென ஆய்வு நிலையம்

[சென்னை)
பாவேந்தர் பாரதிதாசனின் கவிதைகளை ஆய்வு செய்வதற்காக தஞ்சையில் உள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பாரதிதாசன் பெயரில் ஒரு ஆய்வு நிலையம் அமைக்கப்படவேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.
இதனைத் தமிழ்நாடு அரசு பரிசிலிக்கும் என்று மாநில ஆளுநர் பீஷ்ம நாராயண்சிங் தெரிவித்தார்.

## கிழக்கில் ஆயுதமற்ற

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
ஆயுதங்களுடன் கடமைபுரிகின்றனர்.
மட்டுநகரினுள் இராணுவத்தினர் காவல் கடமையிலிருந்து விலக்கப்பட்டு கடந்த சில மாதங்களாகப் பொலிஸாரே இக்கடமையில் ஈடுபடுகின்றனர். (சி)

## தென்பகுதியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
அறிவிப்புவிடுக்கப்பட்டது.
வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் பொலிஸார் ஆணைப்பத்திரமின்றி தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடுதல், கைப்பற்றுதல், கைது செய்தல், தடுத்து வைத்தல் ஆகிய செயல்களுக்கு அதிகாரம் அளிக்கும் ஒழுங்கு விதிகளே இன்று முதல் நீக்கப்பட்டுள்ளனர் (பூ)

## விண்ணபிக்கலாம்

(யாழ்ப்பாணம்)
கூட்டுறவுஊழியர் தராதரப் பத்திர உயர்தரப் பயிற்சி (1991) சேர்த்துக் கொளவதற்கென கூட்டுறவு ஊழியர்களிடமிருந்தும் தகுதி பெற்ற தனிப்பட்டவர்களிடமிருந்தும் எதிர்வரும் 16ம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
கூட்டுறவு ஊழியர்கள், கூட்டுறவு ஊழியர் தராதரப் பத்திர சாதாரண பரீட்சையில் சித்தியடைந்திருப்பதோடு, மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக சேவை செய்திருத்தல் வேண்டும்.
வெளி விண்ணப்பதாரிகள் க. பொ. த [உயர்தர பரீட்சையில் நான்கு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை ஐந்து ரூபா செலுத்தி இல. 16, மணி கூட்டு வீதியிலுள்ள யாழ். கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம். முன்புவிண்ணப்பித்தவர்களும் தொடர்பு கொள்ளவும்; எதிர்வரும் 24ம் திகதி நேர்முகப் பரீட்சை நடைபெற்று ஜூன் மாதம் மூன்றும் திகதி பயிற்சிக்கான விரிவுரைகள் ஆரம்பமாகும்.

## அத்வானி கூட்டத்தில் கல் வீச்சு

[புதுடில்லி]
பீகாரிலுள்ள மதைபூராவில் பி. ஜே. பி. தலைவர் திரு. எல். கே. அத்வானி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும்போது கல் வீசப்பட்டது.
திரு. அத்வானி காயமின்றித் தப்பிக்கொண்டார்.
இது விடயமாக பீகார் மாநில அரசை பி. ஜே. பி. தலைவர்கள் கண்டித்துள்ளனர். (பூ)

## திருமலையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
வத்தினர் முன்னேறி கைமுன்தான் என்னும் பகுதிக்கு வந்தபோது அச்சம் காரணமாக அங்கிருந்த பொதுமக்கள் தப்பிச்சென்றுள்ளார்கள்.
வெளியேற முடியாதிருந்த வயோதிப மாதரிடமிருந்து வன்முறையில் படையினர் நகைகளை அபகரித்துச்சென்றுள்ளார்கள். (வி)

## முஸ்லிம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)
வரும்போதும் படையினர் பாதுகாப்பளித்துச் செல்கிறார்கள்.
மட்டு நகரினுள் தற்போது முஸ்லிம்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே காணப்படுகிறதாம். (சி)

## வலந்தலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
வெடிப்புச்சத்தங்களை கேட்கக் கூடியதாயிருப்பதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (கி)

## மரண அறிவித்தல்

### திரு. சிவசுப்பிரமணியம் சிவநாதன்
[சிவா]
[தகரான் சவூதி]

திரு. சிவசுப்பிரமணியம் சிவநாதன் [சிவா] 27-04-1991 இல் புத்தூரில் திடீர் மரணமடைந்தார். அன்னார் புலோலி தெற்கு நறுபிலி வைரவகோவிலடியைச் சேர்ந்த பத்மாதேவியின் அன்புக்கணவரும், கார்த்திகா, நிரோஜா ஆகியோரின் அன்புத்தந்தையும், தும்பளை திக்கையைச் சேர்ந்த திரு. வ. இ. சிவசுப்பிரமணியம், திருமதி சிவயோகம் ஆகியோரின் சிரேஷ்ட புத்திரரும், நறுவிலியடியைச் சேர்ந்த முருகப்பா ஆறுமுகம் [கோவிந்தா], திருமதி இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் மருமகனும், சிவசுப்பிரமணியம் சிவராம் [லண்டன்], திருமதி விஜயலட்சுமி காந்தமதிநாதன் [லண்டன்], திருமதி யோகராணி கைலேஸ்வரன் [கனடா], திருமதி இராதா தர்மகுலசிங்கம் [தும்பளை] ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஆறுமுகம் முருகேசு [நவக்கிரி], ஆறுமுகம் சிதம்பரநாதன் [மாமூலை முள்ளியவளை], ஆறுமுகம் தர்மகுலசிங்கம் [வியாபாரிமூலை] காலஞ்சென்ற திருமதி மகேஸ்வரி தங்கராசா [நவக்கிரி], புலோலி தெற்கு திருமதி சரஸ்வதி சுப்பிரமணியம், திருமதி சி. கமலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் 28 04-91 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று ஆனைவிழுந்தான் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

புலோலி தெற்கு, புலோலி.
மனைவி, மக்கள்
[எ 1272]

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு மே மாதம் 4ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Regostetod as a News Paper at the General Post office Lankaunder Licence number B/100306/81.

## புலிகள் இராணுவம் மோதல்

[யாழ்ப்பாணம்)
வடக்கு புன்னாலைக்கட்டுவன் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில், நேற்று அதிகாலை கடும் ஷெல் தாக்குதல் மோதல் ஏற்பட்டது
புன்னாலைக்கட்டுவன் வடக்கு வீதியின் குறுக்கே போடப்பட்டிருந்த தடைமீது இராணுவத்தினர் எட்டு ஆட்லறி ஷெல் தாக்குதலை அதிகாலை 5-45க்கு மேற்கொண்டனர்.
இதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் இராணுவத்தினரின் காவலரணை நோக்கி இரண்டு 'அருள்-89' தாக்குதலை மேற்கொண்டனராம்.
இத்தாக்குதலில் இராணுவத் தரப்புக்குச் சேதமேற்பட்டிருக்கலாம் என்றுவ் கூறப்படுகின்றது. (வி)

## உள்ளூராட்சி தேர்தலுக்காக சர்வதேச அவதானிகள்குழு இலங்கை வருகிறது

(கொழும்பு)
எதிர்வரும் 11ம் திகதி சனிக்கிழமை நடைபெற இருக்கும் உள்ளூராட்சி தேர்தலை அவதானிக்கவென 15 அங்கத்தவர்களைக் கொண்ட சர்வதேச அவதானிகள் குழு இலங்கை வரவிருக்கின்றது.
இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மூவர் ஏற்கனவே இங்கு வந்துள்ளனர்.
அவுஸ்ரேலியா, பங்களாதேஷ், கனடா, இந்தியா, நேபாளம், பாகிஸ்தான், பிரிட்டன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 18 அங்கத்தவர்கள் இந்த அவதானிகள் குழுவில் அடங்குவர். (பூ)

## வீரவணக்கம்

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவில் இராணுவத்தினருக்கும் - விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நேற்று முன் தினமிரவு ஏற்பட்ட கடும் மோதலில் வீரவேங்கை ஜெயக்கொடி [கந்தையா ராசவர், நெடுங்கேணி] வீரமரணம் அடைந்தார்
இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர். [வி]

## பொதுக் கூட்டம்

[யாழ்ப்பாணம்)
யாழ். பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர்களுக்குமான விசேட பொதுக்கூட்டமொன்று இன்று சனிக்கிழமை பி. ப. 3-00மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளதெனவும் இதற்கு அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகம் தருமாறு மாணவரவை அறிவித்துள்ளது.

## அமெரிக்க வெடிவிபத்தில் 8 பேர் பலி, 125 பேர் காயம்

(வாஷிங்டன்)
அமெரிக்காவின் நியூ ஓர்லியன்ஸ் மாநிலத்தில் அண்மையில் இரசாயன உர ஆலை ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 8 பேர் பலியானார்கள் 125 பேர் படுகாயமடைந்துள்ளனர்; 7 பேர் காணாமல் போய்விட்டனர்,
காணாமல் போனவர்களை தேடும்பணிதொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருப்பதாகவும் ஆயினும் . இவர்கள் பற்றிய தகவல் எதுவும் இதுவரை கிடைக்கவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது: விபத்திற்கான காரணம்பற்றி எதுவித தகவலும் இல்லை. (ஈ)

## வவனியா

(1ம் பக்கத் தொடர்ச்சி)
விமானங்கள், ஒரு வை-12, அவ்ரோ விமானம் ஆகியன பரவலான தாக்குதல்களை மேற்கொண்டன
நேற்று முன் தினம் மாலை 4 30 மணியளவில் புளியங்கூடல் பகுதியில் அவ்ரோ விமானம் 5 குண்டுகளை வீசியது இதனால் ஒரு சிறுமி கொல்லப்பட்டதோடு 2 பேர் படுகாயமடைந்தனர்.
அத்துடன் புளியங்கூடல் பகுதியிலுள்ள 8 கடைகளும் 2 வீடுகளும் முற்றாகச் சேதமடைந்தன.
அதனையடுத்து 4. 80 மணியளவில் 2 குண்டு வீச்சு விமானங்கள் ஓமந்தைப் பகுதியிலுள்ள ஏ. பி. ஸி கட்டிடத்தின் மீது 5 குண்டுகள் வீசின இதனால் ஒரு தமிழர் கொல்லப்பட்டார். ஏ. பி. ஸி கட்டிடம் முற்றாக சேதமடைந்ததுடன் கடைகளும் சேதமாகின.
மாலை 5 மணியளவில் 2 குண்டு வீச்சு விமானங்கள் இறம்பைக்குளம் பகுதியில் தாக்குதல்கள் நடாத்தியதில் ஒரு கடை சேதமாகியது. 2 குண்டு வீச்சு விமானங்கள் ஓமந்தை மதுரங்குளி ஆகிய பகுதிகளில் 6 குண்டுகளை வீசின.
இதனால் 2 வீடுகள் முற்றாக சேதமாகின.
5 விமானங்கள் ரம்பைக்குளம் பன்றிக்கெய்தகுளம், ஓமந்தை, நொச்சிமோட்டை பறநாட்டான் கல், பேயாடி கூழாங்குளம் ஆகியபகுதிகளில் தாக்குதல்களை மேற்கொண்டவண்ணமே இருக்கின்றனவாம். (வி-56)

## கல்விக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)
கல்வித் திணைக்களத்தினால் கடந்தவாரம் கல்விக்கோட்ட ரீதியாக நடத்தப்பட்ட கல்விக் கருத்தரங்கில் கலந்து கொள்ளாத கொத்தணி அதிபர்கள், அதிபர்கள் யாவரும் தவறாது எதிர்வரும் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்/கனகரத்தினம் ம. ம. வி. மண்டபத்தில் கலந்துகொள்ளும்படி கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (வி)

## வேப்பங்குளம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)
சம்பந்தப்பட்டதினம் நடைபெற்ற தாக்குதலில் 60 இராணுவத்தினர் கொல்லப்பட்டது தெரிந்ததே.

## மணலாற்றிலும்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
முனை, செம்மலைப்பகுதிகளில் 2 வை-12, அவ்ரோ, ஹெலி பொம்மர்கள் ஆகியன இடைவிடாது மேற்கொண்ட தாக்குதல்களில் பொதுமக்களின் வீடுகள் பல முற்றாகச் சேதமடைந்ததுடன் பல பொதுமக்களும் படுகாயமடைந்துள்ளனர். (வி)